**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை- 2019**
**முயற்சியாண்மைக் கல்வி**

**தரம் 10** **பகுதி 1,11** **நேரம்:- 3 மணித்தியாலங்கள்**

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள் | 63 T 1,11 | சுட்டெண்:-..................

**கவனிக்குக:-**
**1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
**2) இலக்கம் 01 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிக**

## பகுதி 1

1. முயற்சியாண்மை என்பது தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
   (1) எதிர்காலத்தை மாற்றுவதற்காகத் தூண்டப்படுகின்ற தனி மனிதனின் மனநிலையாகும்.
   (2) எண்ணுகின்ற தர்க்கிக்கின்ற செயற்படுகின்ற முறை
   (3) இயல்பாகவே உரிமையாக்கிக் கொள்ள முடியாதது
   (4) தனிநபர்களின் நேர் மனப்பாங்கு, நடத்தை, திறன்களின் கூட்டாகக் காணப்படுவது

2. கீழே நிரலானது x உற்பத்திக் காரணிகளையும் y நிரலானது உற்பத்திக் காரணிகளுக்குள் உள்ளடங்கும் விடயங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| x | y |
|---|---|
| அ. நிலம் | A. கணக்காளர் |
| ஆ. உழைப்பு | B. மாற்றமொன்றை ஏற்படுத்தல் |
| இ. மூலதனம் | C. மூலப்பொருட்கள் |
| ஈ. முயற்சி | D. கருவிகளும் , இயந்திரங்களும் |

   உற்பத்திக் காரணிகளுக்கு பொருத்தமாக அவற்றுள் உள்ளடங்கும் விடைகளை இணைக்கும் போது பெறப்படும் விடையாக அமைவது
   (1) C, A, D, B (2) A, B, D, C (3) B, D, A, C (4) D, C, A, B

3. வித்தியன் என்பவர் வீட்டுக் கழிவுப் பொருட்களை தரம் பிரிப்பதன் மூலம் வீட்டிலேயே மிக இலகுவான முறையில் இயற்கைப் பசளை தயாரிப்பதற்கு புதிய வகையான இயந்திரம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். இவரிடம் காணப்படும் புதிய வழிகளைத் தேடிக் கொள்வதற்கான திறனைக் குறிப்பிடுக.
   (1) நட்ட இடர்களைப் பொறுப்பேற்றல் (2) ஆக்கத்திறன்
   (3) நெகிழ்வுத் தன்மை (4) அர்ப்பணிப்புத் திறன்

4. பின்வருவனவற்றுள் ஆக்கத்திறனுக்குத் தடையாக அமையும் காரணி அல்லாதது,
   (1) நம்பிக்கை, மனப்பாங்குகள் தொடர்பில் உறுதியான நம்பிக்கை வைத்திருத்தல்
   (2) ஒரு பிரச்சினைக்கு ஒரு தீர்வு மாத்திரமே இருப்பதாக எண்ணுதல்
   (3) பிரச்சினைகளை சவாலாகக் காணுதல்
   (4) உடனடி பெறுபேற்றினை எதிர்பார்த்தல்

5. பேனை ஒன்றில் சிறியளவான மணிக்கூடு ஒன்றினைப் பொருத்தி உற்பத்தி செய்கின்றார்களெனின் இவ் உற்பத்தி புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகளில் எதனை குறித்து நிற்கின்றது?
   (1) நீடிப்பு (2) புதிய கண்டுபிடிப்பு (3) கூட்டு (4) பின்பற்றுதல்

6. பின்வருவனவற்றுள் சேவைகளின் பண்புகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.
   (1) தொட்டுணரக் கூடியது, களஞ்சியப்படுத்தக் கூடியது
   (2) தொட்டுணரக் கூடியது, களஞ்சியப்படுத்த முடியாதது
   (3) வழங்குனரிடம் இருந்து பிரிக்க முடிதல், பாதுகாக்க முடியாதது
   (4) தொட்டுணர முடியாதது, பௌதீக நிலைப்பாடு இல்லாதது

7. முயற்சியாளர், வணிகர் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   அ. ஆதவன் தனது தந்தையால் நடாத்தப்பட்ட புடைவை வணிகத்தை அதேபோன்று இன்றும் நடாத்தி வருகின்றார்.
   ஆ. அன்பழகன் என்பவர் மூடப்படக் கூடிய நிலையிலிருந்த பாடசாலை ஒன்றை பிரசித்தி பெற்ற பாடசாலை ஒன்றாக மாற்றினார்.
   இ. கரன் என்பவர் தனது வணிகத்திற்காக பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத காரணத்தால் அதனை முடிவுறுத்தினர்.
   ஈ. உள்ளூரில் பனையோலைகளைக் கொண்டு அலங்காரப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் விமலன் என்பவர், வெளிநாட்டு சந்தையில் பிரவேசிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றார்.

   மேற்கூறப்பட்ட கூற்றுகளுக்கமைய முயற்சியாளராக கருதப்படக் கூடியவர்கள்
   (1) ஆதவன், அன்பழகன் (2) கரன், விமலன் (3) அன்பழகன், விமலன் (4) அன்பழகன், கரன்

8. முயற்சியாண்மை மற்றும் ஆளுமைப் பண்புகள் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   அ. எத்தகைய தடைகள் வந்தபோதும் தனது நோக்கத்தை நிறைவேற்ற பின்னிற்க மாட்டார்கள்.
   ஆ. எந்த ஒன்றையும் பொறுப்பேற்கும் இயலுமை காணப்படல்.
   இ. தனது அதி உன்னத எதிர்பார்ப்புகள் நிறைவேறாத பொழுது தளர்வடைவர்.
   ஈ. பிரச்சனையொன்றுக்குப் புதுவகையிலான தீர்வொன்றைத் தேடியறிவதிலும் பார்க்க ஏற்கனவே இருக்கின்ற தீர்வொன்றின் மூலம் திருப்தியடைவர்.
   உ. சூழலில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக அடிக்கடி அவதானத்துடன் இருப்பர்.
   மேற்கூறியவற்றுள் முயற்சியாண்மைப் பண்புகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதியாக அமைவது,
   (1) ஆ, ஆ, இ (2) அ, இ, ஈ (3) ஆ, ஈ, உ (4) அ, ஆ, உ

9. முயற்சியாண்மை மூலம் முயற்சியாளருக்கு மட்டும் கிடைக்க கூடிய நன்மையாகக் கருதப்படுவது,
   (1) தேசிய வளங்கள் பயன்படுத்தப்படல்
   (2) பயன்படுத்தாத ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்ளல்
   (3) பிரதேச அபிவிருத்திகள் ஏற்படுதல்
   (4) தொழில் வாய்ப்புக்கள் உருவாகுதல்

10. நுகர்வோர் தேவை மற்றும் விருப்பத்தை பூர்த்தி செய்ய முடியாத சந்தையொன்றின் பகுதியை (சந்தை இடைவெளி) சரியாக இனங்கண்டு அவற்றின் மூலம் வெற்றிகரமான வணிக வாய்ப்பினை உருவாக்கிக் கொள்வதற்கு உதவியாக அமையும் வணிகம்,
    (1) பேரளவு வணிகம் (2) கூட்டுறவு வணிகம்
    (3) சிற்றளவு வணிகம் (4) நடுத்தரளவு வணிகம்

11. சிற்றளவு வணிகமொன்றின் பண்பாக அமையாதது,
    (1) குறைந்தளவான மூலதனம் ஈடுபடுத்தப்பட்டிருத்தல்
    (2) உள்நாட்டு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படல்
    (3) வணிகச் செயற்பாடுகளுக்கு குடும்ப அங்கத்தவர்களின் பங்களிப்பு பெறப்படல்
    (4) ஊழியர் தொகை அதிகமாக இருத்தல்

12. முயற்சியாளரின் வகிபாகங்களின் செயற்பாடுகளில் முகாமையாளர் என்ற வகிபாகச் செயற்பாட்டினைக் குறிப்பது,
    (1) இலாபம் அல்லது நட்டத்தைப் பொறுப்பேற்றல்
    (2) வணிகத் திட்டத்தைத் தயாரித்தல்.
    (3) வேலையை செயற்படுத்தும் போது ஊழியர்களுக்கு வழிகாட்டுதல்
    (4) ஊழியர்களை ஊக்கப்படுத்தல்.

13. முயற்சியாளர் ஒருவரால் உருவாக்கக் கூடிய தொழில்நுட்பத் திறனுக்கு உதாரணமாக அமைவது
(1) சிறந்த ஊழியர்களை சேர்த்துக் கொள்ள இருக்கின்ற திறன்
(2) ஊழியர்களை ஊக்கப்படுத்தல்
(3) புதிய சந்தை வாய்ப்புக்களை தேடிக் கொள்ளல்
(4) உரிய நேரத்திற்கு வேலைகளில் ஈடுபடல்

14. முயற்சியாளர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் திறன்கள் சில கீழே தரப்படுகின்றது.
A. இயந்திரங்களை சரியான இடத்தில் பொருத்துதல், இயக்குதல்
B. உபாய வழிமுறைகளைத் தீர்மானித்தல்
C. வணிகத்தின் போட்டித் தன்மைக்கு முகம் கொடுத்தல்
D. ஊழியர்களை ஊக்கப்படுத்தல்
E. சிறந்த ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளல்
F. கூட்டம் நடாத்துதல்
மேலே குறிப்பிட்டவற்றுள் எண்ணகக்கருவாக்கத் திறன்களை மட்டும் கொண்ட தொகுதியை தெரிவு செய்க.
1. A, B  2. D, E  3. C, F  4. B, C

15. பின்வரும் வணிகச் சூழல் தொடர்பான கூற்றுக்களில் நவீன வணிகச் சூழல் பற்றி சரியாக வெளிக்காட்டும் கூற்றினைத் தெரிவு செய்க.
(1) தேவைகளும் விருப்பங்களும் விரிவடைந்து காணப்படல்
(2) இலாபம் முக்கிய குறிக்கோளாக இருத்தல்
(3) போட்டி குறைவாகக் காணப்படல்
(4) வணிகர்கள் பலமுடையவர்களாக இருத்தல்

16. வணிகமொன்றிற்கு மூலதனத்தை ஈடுபடுத்துபவர் …………………… ஆவார்.
(1) உரிமையாளர்  (2) ஊழியர்  (3) தலைவர்  (4) முகாமையாளர்

17. வணிகமொன்றின் புறச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் அறிந்து கொள்ளப்படுவது,
(1) பலம், பலவீனம்  (2) பலம், வாய்ப்பு
(3) வாய்ப்பு, அச்சுறுத்தல்  (4) பலவீனம், அச்சுறுத்தல்

18. பின்வருவனவற்றுள் அண்மிய சூழல் காரணியாகக் கருதப்படுவது,
(1) உரிமையாளர்  (2) போட்டியாளர்கள்  (3) முகாமையாளர்  ஊழியர்

19. இரண்டாம் நிலை வணிகத்துள் உள்ளடங்கும் பொருளாதாரச் செயற்பாடு,
(1) பாலம் அமைத்தல்  (2) பழச் செய்கைகளில் ஈடுபடல்
(3) இரத்தினக் கல் அகழ்தல்  (4) மொத்த சில்லறை வியாபாரம்

20. அனைத்து வளங்களிலிருந்தும் உச்சபயனை பெற்றுக் கொள்ள அடிப்படையாக அமையும் வளம்,
(1) பௌதீக வளம்  (2) கனிய வளம்
(3) மனித வளம்  (4) இயற்கை வளம்

21. தொலைக்காட்சி சேவையொன்றை நடாத்தும் நிறுவனமொன்று தனது கல்விச் சேவையின் மூலம் தரம் 10 மாணவர்களுக்கு சிறுவணிக மொன்றை ஆரம்பித்தல் தொடர்பாக நிகழ்ச்சி ஒன்றினை ஒலிபரப்பு செய்யுமானால் குறித்த நிகழ்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்கு நுகர்வோராக கருதப்படுபர்கள்,
(1) தரம் 10 கற்கும் மாணவர்கள்
(2) கல்விச் சேவை நிகழ்ச்சிகளை பார்க்கும் மாணவர்கள்
(3) குறித்த தொலைக்காட்சி நிறுவனத்தின் அனைத்து நிகழ்ச்சியினையும் பார்ப்பவர்கள்
(4) தரம் 10 இல் முயற்சியாண்மை பாடம் கற்கும் மாணவர்கள்

22. நீரிழிவு நோயாளருக்கு விசேடமாக தயாரிக்கப்பட்ட சத்துணவு பொதிகளை அறிமுகம் செய்தலானது,
(1) தற்போதைய சந்தைக்கு தற்போது காணப்படும் உற்பத்திப்பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.
(2) புதிய சந்தைக்கு தற்போது காணப்படும் உற்பத்திப் பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.
(3) தற்போதைய சந்தைக்கு புதிய உற்பத்திப் பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.
(4) புதிய சந்தைக்கு புதிய உற்பத்திப் பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.

23. மலர் செய்கை, ஓவியம் வரைதல், அலங்கார மீன் வளர்ப்பு போன்ற வணிகங்கள் உருவாகுவதற்கு காரணமாக அமைந்த வணிக எண்ண மூலாதாரம்,
(1) சந்தை ஆராய்ச்சி (2) தொடர்பு சாதனம்
(3) பொழுதுபோக்கு (4) நுகர்வோர் பிரதிபலிப்பு

24. பிஸ்கட் உற்பத்தியாளர்கள் தற்போது தமது உற்பத்திப் பொருட்களை குறைந்தளவு நிறை சிறியளவில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகின்றனர். குறித்த பிஸ்கட் உற்பத்தி நிறுவனம் SCAMPER மாதிரியில் எவ்வழி முறையைப் பின்பற்றியுள்ளது?
(1) மாற்றீடு செய்தல் (substitude) (2) மீள உருவாக்குதல் (Re arrange)
(3) வேறாக்குதல் (Eliminate) (4) சிறிதாக்குதல் (minimize)

25. SWOT பகுப்பாய்வினை மேற்கொள்ளும் போது வணிகமொன்றிற்கு நிதிப்பற்றாக்குறை, ஊழியர் அர்ப்பணிப்பு குறைவு, காலவதியான தொழில்நுட்பம் என்பன காணப்படுமாயின் அதனை குறித்து நிற்பது நிறுவனத்தின்,
(1) பலத்தையாகும் (2) சவாலையாகும்
(3) பலவீனத்தையாகும் (3) வாய்ப்பையாகும்

(25×2= 50 புள்ளிகள்)

## முயற்சியாண்மைக் கல்வி
## பகுதி 11

❖ **விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

**வினா இல 01**

(1) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா என்பதைக் குறிப்பிடுக.
A) உற்பத்திக் காரணிகள் முயற்சியாளரினாலேயே நெறிப்படுத்தப்படுகின்றன.
B) முயற்சியாண்மை செயற்பாட்டினை வயது குறைந்தோர் உருவாக்கிக் கொள்ள முடியாது.

(2) முயற்சியாளர் தனது சகல செயற்பாடுகளிலும் நட்ட இடர், அதன் நன்மைகள் தொடர்பாகக் கவனம் செலுத்துவார். நட்ட இடர், நன்மைகள் இரண்டுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

(3) வணிகங்களின் பண்புகள் இரண்டு தருக.

(4) சமூக முயற்சியாளர் உள்ளக முயற்சியாளர் ஆகியோருக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

(5) முயற்சியாளர் ஒருவர் சமூக ரீதியாக பெற்றுக் கொள்ளும் நன்மைகளுக்கு இரண்டு உதாரணம் தருக.

**வினா இல 02**

(1) வணிகர்களுக்கும் முயற்சியாளர்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள் இரண்டு தருக.

(2) முயற்சியாண்மை தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான முயற்சியாண்மைப் பண்பினைக் குறிப்பிடுக.
A) முயற்சியாளர் தாம் முயற்சிக்கும் கருமம் வெற்றியடையும் என நம்பிக்கை கொள்ளல்
B) எதிர்காலத்தில் எவ்வாறான ஒருவரைப் போல் வர வேண்டும் என தெளிவான இலக்கொன்று முயற்சியாளரிடையே காணப்படல்.

(3) மனித தேவைகளின் பண்புகள் இரண்டு தருக.

(4) பொருளாதார விருத்தியில் சிற்றளவு வணிகங்களின் பங்களிப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(5) முயற்சியாளர் என்ற வகையில் அவர் செயற்படும் போது எவ்வாறான வகிபங்குகளை ஏற்கின்றார் என்பதைக் குறிப்பிடுக.

**வினா இல 03**

(1) சிற்றளவு வணிகத்தை நடாத்திச் செல்லும் 'வைகுந்தன்' என்பவர் தனது முயற்சியாண்மைச் செயற்பாட்டை மேற்கொள்ளும் போது ஆற்றும் கடமைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. தன்னிடமுள்ள பணத்தை இட்டு வணிகத்தை ஆரம்பித்தல்.
B. வணிகத்திட்டத்தை தயாரித்தல்
C. வணிகத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
D. ஊழியர்களை ஊக்கப்படுத்தலும் தேவையான வழிகாட்டல்களை வழங்கலும்.

மேற்கூறிய கடமைகளுக்கு பொருத்தமான முயற்சியாளர் வகிபங்குகளைக் குறிப்பிடுக.

(2) பல்வேறு சிற்றளவு வணிகங்கள் ஆரம்பித்து சிறிது காலங்களிலேயே தோல்வி அடைகின்றன. அவற்றுக்கான காரணங்கள் இரண்டு தருக.

(3) சிற்றளவு வணிகம் ஒன்றை ஆரம்பித்து நடாத்துதல் இலகுவாக காணப்படுவதற்குரிய காரணங்கள் இரண்டு தருக.

(4) முயற்சியாளர் ஒருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(5) வணிகச் சூழலிலுள்ள உண்மையான மாற்றங்களை அறிந்து கொள்வதினூடாக முயற்சியாளர் பெறும் பயன்கள் இரண்டு தருக.

**வினா இல 04**

(1) உணவகமொன்றின் அகச் சூழல் தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A) உணவகத்தில் உணவு தயாரிக்கும் ஊழியர்கள் தரமான உற்பத்திகளை மேற்கொள்கின்றனர்.
B) உணவகத்தை மேலும் விரிவுபடுத்த மேலதிக மூலதனம் தேவையாக உள்ளது.
C) உணவக முகாமையாளர் சிறந்த மானிடம் மற்றும் தொடர்பாடல் திறனைக் கொண்டவராகக் காணப்படல்.
D) உணவு பரிமாறும் ஊழியர்களில் இருவர் வேலைக்கு சமூகமளிப்பது ஒழுங்கீனமாக உள்ளது.

மேற்கூறிய கூற்றுக்களை பலம் பலவீனம் எனக் குறிப்பிடுக.

(2) பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான சூழற்காரணிகளைக் குறிப்பிடுக.

A) சனத்தொகையில் ஆண் பெண் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படல்.
B) கற்றல் கற்பித்தல் ஊடகமாக இணையத்தை பயன்படுத்தல்

(3) அண்மிய சூழல் என்பதனால் கருதப்படுவது யாது?

(4) இலங்கை பொருளாதாரத்தில் ஆரம்பத்துறை அல்லது முதலாம் நிலை வணிகத்திற்கு இரண்டு உதாரணம் தருக.

(5) வணிகச் சூழல் முன்னேற்றம் தொடர்பாக அவதானத்துடன் இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் இரண்டு தருக.

**வினா இல 05**

(1) புதிய வணிகரொருவர் மூலதனத்தை பெறக்கூடிய வழிகள் நான்கு தருக.

(2) பல்வேறு வகையான இயற்கையான பழங்களைப் பெற்று குளிர்பான விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு வித்யா எண்ணுகின்றார். இவர் தனது வணிகத்திற்கு பொருத்தமாக இடத்தை தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

(3) உமக்கு தெரிந்த பொருள் அல்லது சேவையொன்றினைக் குறிப்பிட்டு அதற்கு போட்டியாகவுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4) பின்வரும் உற்பத்திப் பொருட்களை வழங்கும் நிறுவனங்களுக்கு இலக்கு நுகர்வோர் யார் என்பதைக் குறிப்பிடுக.

A) கொழுப்பற்ற பால் மா உற்பத்திகள்

B) குரக்கன் மாவினால் உற்பத்தி செய்யப்பட்ட பாண்

(5) புதிய உற்பத்தியொன்றை முன்வைப்பதற்காக முயற்சியாளர் பல்வேறு வழிமுறைகளை பின்பற்றும் SCAMPER மாதிரியில் தொடர்புபடுத்தல் என்பதற்கு உமக்கு தெரிந்த உதாரணம் ஒன்றைக் குறிப்பிடுக.

**வினா இல 06**

(1) வணிக எண்ணம் என்பதனால் கருதப்படுவது யாது?

(2) சிறந்த வணிக வாய்ப்பொன்றின் பண்புகள் இரண்டு தருக.

(3) வணிகமொன்று எத்தகைய பகுப்பாய்வினை செய்வதன் மூலம் மிகவும் பொருத்தமானதும் இலகுவானதுமான வணிக வாய்ப்பினை தெரிவு செய்து கொள்ள முடியும்?

(4) வணிக எண்ணமொன்றை சூட்சுமமான பகுப்பாய்விற்கு உட்படுத்துவதற்கு கருத்தில் கொள்ள வேண்டிய எடுகோள்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(5) முயற்சியாளரொருவருக்கு தமது புத்துருவாக்க வணிக எண்ணத்தை பாதுகாத்துக் கொள்வதற்கு உதவும் சட்ட ரீதியான வசதி யாது?